**கம்பொள நகர சபை - 2023**
**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பொள நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பொள நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகை தினத்தில் உள்ளவாறு முடிவடைந்திருக்காத 16 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு களஞ்சிய இருப்பு, களஞ்சிய இருப்புப் பதிவேட்டுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 137,590 தொகை இருப்பு மீதி மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகளின் மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 73,205,271 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்கள் தொடர்பாக பேணப்பட்டுள்ள பொருட் பதிவேட்டின் படி 31 குப்பை வண்டிகள் காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 815,559 இற்கான 36 குப்பை வண்டிகள் காட்டப்பட்டிருந்தமையால் 5 குப்பை வண்டிகளின் இணக்கமின்மை காணப்பட்டது. | விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 4,436,417,684 இற்கான 11 கணக்கு மீதிகளில் சட்டரீதியான காணி உறுதிகள், அட்டவணைகள், உரிய ஆவணங்கள், கோப்புக்கள் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் பௌதீக உளமை தொடர்பான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | தகவல்கள் சரிசெய்யப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கோப்புக்கள் நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | ஐந்தொகையில் நிலையான சொத்துக்களுக்குரிய அட்டவணைகளில் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 6,610,525,372 இற்கான 76 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி வெவ்வேறாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் ஆவணப்படுத்தப்படும் என. | சரியாக பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு (அதிகாரம் 255) | | | |
| (i) 36(உ)(ii) | அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரமின்றி 134 நபர்களுக்கு சபையின் காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 3,736,411 இற்கான குத்தகை அறவீடு செய்திருக்கவில்லை. | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி முறையான அங்கீகாரத்தின் கீழ் காணிகளை குத்தகைக்கு வழங்க வேண்டியதுடன் குறிப்பிட்ட குத்தகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ii) பிரிவு 164 | சபைக்கு சொந்தமான வாடிவீடு 2019 முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 6,192,617 இற்கான நிலுவை முகாமைத்துவ கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்க இணங்க நிலுவை கட்டணம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் | | | |
| (i) பந்தி 28(1) | சபையினால் வழங்கியிருந்த அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் இன்றி 04 நிர்மாண வேலைகள் காணப்பட்டது என மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அங்கீகாரத்துடனான வரைபுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்க இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பந்தி 84 | அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அபிவிருத்தி வரைபின் படி பூர்த்தி செய்யப்பட்டு வதிவதற்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 முதல் மீளாய்வாண்டு வரை அங்கீகரிக்கப்பட்ட 1692 கட்டிட விண்ணப்பப் பத்திரங்கள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | கட்டுநிதி வழங்கப்படும் கருமம் முடிவடைந்தவுடனே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2011 முதல் 2019 ஆண்டு வரை வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 225,000 இற்கான 03 முற்பணங்களை மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் பெற்ற பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 394 | 2004 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலத்திற்குரிய வழங்கப்பட்டிருந்த பின்னர் மதிப்பளிக்கப்படாத ரூபா 563,753 இற்கான 28 காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571(3) | 2017-2020 காலத்திற்குரிய காலவதியாகிய ரூபா 814,533 இற்கான 62 வைப்புக்கள் தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (iv) | நிதிப் பிரமாணம் 1646 | மீளாய்வாண்டிற்குரிய 13 வாகனங்களில் சம்பவக் குறிப்பேடுகள் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 | 02 வருட காலம் முதல் 12 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 67,273,302 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 68,793,142 தொகை ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 30,200,000 | 33,362,196 | 31,601,307 | 60,698,191 | 30,050,000 | 32,936,986 | 33,682,260 | 58,937,302 |
| ii. | வாடகை | 34,050,000 | 30,694,111 | 25,056,372 | 33,130,845 | 24,375,000 | 22,453,198 | 24,846,697 | 27,493,106 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,800,000 | 3,685,664 | 3,737,664 | 21,000 | 3,300,000 | 2,737,733 | 2,689,733 | 73,000 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 56,420,000 | 49,285,454 | 40,905,259 | 79,869,177 | 57,750,000 | 69,060,026 | 56,843,948 | 71,488,982 |
| | | **123,470,000** | **117,027,425** | **101,300,602** | **173,719,213** | **115,475,000** | **127,187,943** | **118,062,638** | **157,992,390** |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| (i) மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று நிலுவை வீதவரி மீதி ரூபா 60,698,191 தொகை காணப்பட்டதுடன், அலகு ஒன்றின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இற்கும் ரூபா 50,000 இற்கும் இடைப்பட்ட 1545 வீதவரி அலகுகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 28,670,115 தொகையும் ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடைப்பட்ட 63 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 4,425,995 தொகை மற்றும் ரூபா 100,000 இனை மிகைத்துள்ள 16 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 4,058,773 தொகையும் காணப்பட்டது. | ஆதனங்களை தடை செய்வதன் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இற்கு இணங்க 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டுள்ளது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் |
| **(ஆ) கடை வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 29,394,433 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 100,000 இனை மிகைத்த நிலுவை கடை வாடகை 36 சந்தர்ப்பங்கள் தொடர்பான நிலுவை ரூபா 13,452,546 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவற்றில் BSSC இலக்கங் கொண்ட இபோச பஸ் நிலைய கடை கட்டிடத் தொகுதியிலிருந்து மாத்திரம் 2014 முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 5,503,332 இற்கான கடையறை வாடகை நிலுவையொன்று காணப்பட்டது. | மீண்டும் திருத்தத்திற்காக விலைமதிப்பு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றில் நடாத்தப்பட்டு வரும் தனியார் கம்பனியொன்றில் இருந்து 2002 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,438,788 இற்கான கடை வாடகை அறவிடப்படாமையால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆண்டில் அந்த வாடகையை அறவீடு செய்வதற்காக மாவட்ட நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் குறிப்பிட்ட வாடகை அறவீடு செய்திருக்கவில்லை. | நீதிமன்ற தீர்ப்பு கிடைக்க வேண்டியுள்ளது என. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (iii) | பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் 38 கடைகள் வாடகைக்கு கொடுக்க முடியாமல் மூடப்பட்டிருந்ததுடன் டென்டர்களின் மூலம் வியாபார அலுவல்களுக்காக சாட்டப்பட்டிருந்த 60 கடையறைகள் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் முறைசாரா விதமாக வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனைத்து கடையறைகளும் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறைப் பிரகாரம் வாடகை உடன்படிக்கைகளுக்கு அணுக வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானங்கள்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 1,368,020 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 2020 – 2022 ஆண்டுகள் தொடர்பாக ரூபா 601,920 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | முச்சக்கர வண்டிக் கட்டணம் தொடர்பாக துணைச் சட்டங்கள் ஆக்கியிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை முச்சக்கர வண்டி கட்டணம் ரூபா 6,798,757 தொகை காணப்பட்டது. அதில் 2016 – 2022 காலம் தொடர்பான நிலுவை மீதி ரூபா 6,534,057 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை நீர்க் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,229,605 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 64,559,085 தொகை காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்தை தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேற்றுதல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளின் மீண்டுவரும் வருமானம் பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாமல் ரூபா 133,233,067 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திட்டம் ஒன்றின் படி அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது என. | மிகைப் பணம் அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப்பொருள் அப்புறப்படுத்தும் முகாமைத்துவ செய்முறையொன்று காணப்படாமையால் மற்றும் குண்டசாலே பிரதே சபையினால் குப்பைகள் ஏற்றுக் கொள்ளாமையால் தம்புள்ள மற்றும் உலபனே குப்பை செயற்களங்களுக்கு குப்பைகள் எடுத்துச் செல்லப்பட்டது. இதன் காரணமாக அதற்காக ரூபா 3,320,940 இற்கான மேலதிக செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | குப்பையின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் குண்டசாலைக்கு எடுத்துச் செல்லல் கடினமாக இருத்தல். | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பை முகாமைத்துவம் செய்ய வேண்டியதுடன் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். |
| (இ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 118 ஏற்பாடுகளின் படி பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளின் மல கழிவுப் பொருள் அப்புறப்படுத்துவதற்காக சாக்கடை வண்டி சேவை ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட செயற்திட்டமொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,771,954 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,868 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 3,721,086 தொகையாக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,348,898 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,781,131 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 6,616,328 தொகை காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 9,041,373 இற்கான 03 வாகனங்கள் மற்றும் ரூபா 613,800 இற்கான 04 டேலர்கள் 01 வருடத்திற்கும் 08 இற்கும் இடைப்பட்ட காலவீச்சு முதல் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | எதிர்காலத்தில் ஏல விற்பனை செய்வதற்கு மற்றும் திருத்தவேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான பொதுச் சந்தையின் 5 இறைச்சிக் கடைகள் 2016 ஆண்டு முதல் குறிக்கோள் சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்தது. | டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | டென்டர் பண்ணி வருமானம் உழைக்க வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,600,000 இற்கான டபள் டெம் ரோலர் இயந்திரம் ரூபா 53,500 இற்கான 44 ஸ்ரீ 7691 இலக்கங் கொண்ட டேலர் மற்றும் ரூபா 4,394,000 இற்கான பொப்கெட் இயந்திரத்தின் உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான சந்தசிரிவத்த காணி வளவில் 98 காணித் துண்டுகளில் அங்கீகாரமின்றி நபர்கள் வசித்துவந்த போதிலும் அந்த வதிவோரை அகற்றி சபையின் ஆதனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | என்பீஆர்ஓ அறிக்கை பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபை ஆதனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | சாட்டுதல் கட்டளைகளின் மூலம் சபைக்கு சாட்டப்பட்டிருந்த போத்தலாபிட்டிய காணியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது 03 பதவிகளில் 76 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 11 மிகைகளும் காணப்பட்டது. | உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | 2001 முதல் மீளாய்வாண்டு வரையான காலவீச்சில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஓய்வு பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 33 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 1,180,614 இற்கான கடன்மீதி ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நெருங்குவதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக சுட்டிகள் இனங்கண்டிருக்கவில்லை. | குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |